சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 3 (lw- 5) | நாள் | 14.02.2024 |
| பெயர் | ஞானப்பிரகாசம் | ஜாதி | |
| தந்தை பெயர் | பன்னீர்செல்வம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி ஆஜரில்லை. எதிரி ஆஜரின்மை காரணமாக எதிரி தரப்பு வழக்கறிஞர் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மஞ்சவாய்க்கால் சத்யா காலனியில் குடியிருந்து வருகிறேன். மயிலாடுதுறை புது பஸ் ஸ்டாண்டில் பழக்கடை நடத்தி வருகிறேன். கொலை செய்யப்பட்டு இறந்த அஜித்குமாரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். 20.03.2024 அன்று இரவு சுமார் 9.30 மணியளவில் நானும் மாதவனும் சொந்த வேலை காரணமாக சென்று திருவழுந்தூர் சாலை வழியாக வரும்போது இறந்து போன அஜித்தும் சரவணனும் Splender பைக்கில் எங்களை கடந்து போனார்கள். அவர்கள் சென்ற வாகனத்திற்கு பின்னால் இரு வாகனங்களில் சிவப்புகலர் அப்பாச்சி மற்றும் வெள்ளைக்கலர் பல்சர் வாகனத்தில் ஒரு வாகனத்தில் 2 நபர்களும் ஒரு வாகனத்தில் 3 நபர்களுமாக ஐந்து பேர் எங்களை கடந்து சென்றார்கள். அதில் ஒரு வாகனத்தில் வந்த சந்திரமோகனும், சந்திரமௌலி ஆகியோர் இறந்துபோன அஜித் வந்த வாகனத்தை இடித்து தள்ளினார்கள். இந்த பறக்குச்சிகாரி மகன் தான் என் அண்ணனை வெட்டியது இவனை கொல்லுங்கடா என்று சொல்லி அஜித்தை அரிவாளால் முகத்தில்

சந்திரமோகன் வெட்டினார். அப்பாச்சியில் வந்த பாலாஜி, சதீஷ், ஸ்ரீராம் ஆகியோரும் சேர்ந்து அஜித்தை அரிவாக்கத்தியால் அஜித்தை முகத்தில் வெட்டினார்கள். சரவணன் ஓடிய போது அவனையும் அந்த பறக்குச்சிகாரி மகனையும் வெட்டுங்கள் அவன் சாட்சி சொல்லுவான் என்று சொல்லி சரவணன் தடுத்தபோது அவரது கையிலும் முகத்திலும் மேற்படி ஐந்து பேரும் அரிவாக்கத்தியால் வெட்டினார்கள். அதற்கு பிறகு சரவணன் தோப்புதெரு பக்கம் ஓடினான். அவன் ஓடாத அளவிற்கு எட்டாவது ஒன்பதாவது எதிரிகள் அவனை மறைத்தார்கள். ஓரமாக நின்று கொண்டிருந்த சத்ய சீலன், நாகராஜ் ஆகியோர் கையில் கத்தி வைத்திருந்தார்கள் அவர்களும் அஜித் முகத்திலேயே வெட்டினார்கள். கிழக்கு பக்கம் மோகன்தாஸ் சரவணன் ஓடாத அளவிற்கு மறைத்து கொண்டு நின்றார். அதன்பிறகு நாங்கள் போனால் எங்களையும் வெட்டிவிடுவார்கள் என்று பயந்து ஸ்கூல் அருகில் நின்று விட்டோம். அஜித் இறந்த பிறகு அவர்கள் 10 பேரும் ஐந்து வண்டியில் நீடூர் பக்கம் சென்று விட்டார்கள். அதன்பிறகு பயந்துகொண்டு நாங்கள் போய்விட்டோம். 21.03.2024 அன்று அஜித் இறந்ததை பார்க்க மயிலாடுதுறை GH க்கு போனபோது DSP இது சம்பந்தமாக என்னை விசாரித்தார் நான் நடந்ததை சொன்னேன். மறுமாதம் 08.04.2024 அன்று DSP நான் வைத்துள்ள பழக்கடைக்கு வந்து என்னை விசாரித்தார். அவ்வளவு தான்.

**8 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

8 ம் எதிரியை தெரியும் என வழக்கிற்காக அடையாளம் காண்பித்து போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 20.03.2024 அன்று இரவு 9.00 மணியளவில் நானும்

மாதவனும் அஜித்குமார், சரவணன், தாக்கப்பட்டதை நேரில் பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக அதை நேரடியாக பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 8ம் எதிரி அஜித்குமாரை வழி மறைத்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 21.03.2024 அன்று மருத்துவமனையில் DSP என்னை விசாரித்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 8ம் எதிரியின் தந்தை பெயர் இதுநாள் வரை தெரியுமா என்றால் தெரியாது. அவர் எந்த பகுதியை சேர்ந்தவர் என்றும் இதுநாள் வரை தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் விசாரித்தபோது நான் எங்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தினால் உடனே காவல் நிலையம் வந்து இதை சொல்லாமல் இருந்துவிட்டோம் என்றும் இன்று 08.04.2024 அன்று மயிலாடுதுறை DSP விசாரிக்க நடந்த விவரத்தை சொன்னேன் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம் சொல்லியுள்ளேன். 21.03.2024 அன்று போலிசார் என்னை விசாரித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போன அஜித்குமாரை ஐந்து வருடமாகத் தெரியும். இந்த சூழ்நிலையில் 8ம் எதிரியை சம்பவ இடத்தில் பார்த்தது போன்ற ஒரு சாட்சியத்தை உருவாக்குவதற்கு 06.04.2024 அன்று 8ம் எதிரியை கைது செய்த பிறகு என்னை 30.04.2024 அன்று ஒரு சாட்சியாக உருவாக்கினார்கள் என்றால் சரியல்ல. இதன் காரணமாகத்தான் போலிசார் என்னைன் இருமுறை விசாரித்ததாக குழப்பமான நிலையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதிக்கு முன் எனக்கு 8ம் எதிரியை தெரியாது என்றால் சரியல்ல. அவரை சம்பவம் நடந்த அன்று பார்த்திருக்கிறேன். அவர் பெயர்

விலாசம் தெரியாது. அதன்பிறகு பசங்க விசாரித்தபோது பெயரை தெரிந்து கொண்டேன். சம்பவம் நடந்த அன்று 8ம் எதிரியை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பசங்க விசாரித்தபோது 8ம் எதிரி பெயரை தெரிந்து கொண்டதாக போலிஸ் விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

**11ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 5 வருடமாக பழ வியாபாரம் செய்து வருகிறேன். போலிஸ் என்னை விசாரிக்கும்போது நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம் அப்படிதான் சொல்லியிருக்கிறேன். பதட்டத்தில் முதலில் விசாரித்தபோது முழுவிவரங்களையும் சொல்லவில்லை அதன்பிறகு 08ம் தேதி விசாரித்தபோது சொல்லியிருக்கிறேன். 8ம் தேதி என்னை பழக்கடையில் வைத்து DSP விசாரித்தார். எழுதிக்கொடுத்தேனா என்றால் இல்லை. போலிசார் அடையாள அணிவகுப்பு நடத்தினார்களா என்றால் இல்லை. போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு சொல்லிக்கொடுத்தார்கள் என்றால் இல்லை. இறந்து போன அஜித்குமார் எனக்கு சொந்தக்காரரர் இல்லை. சம்பவத்திற்கு முன்பு அவரை தெரியும் என்றால் சரி. அவரின் அப்பா, அம்மாவை தெரியுமா என்றால் தெரியும் அவர்கள் தான் அவரின் அப்பா, அம்மா என்று தெரியாது. இறந்த போன அஜித்குமாரை எனக்கு தெரியும் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க போலிசார் சொல்லிக்கொடுத்தபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**11ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்த போது பயத்தில் அந்த வழியாக செல்லாமல் திரும்ப சென்று விட்டோம் என்று சொல்லியுள்ளேன் என்றால்

சரியல்ல. நான் 15 வருடங்களாக பழவியாபரம் செய்து வருகிறேன். நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பது போல் வேறு எந்த வழக்கிலாவது சாட்சியம் அளித்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் சாலையில் பழ வியாபாரம் செய்பவன் என்றாலும் அதனால் சம்பவத்தை பார்த்திருந்தால் போலிசில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இது சம்பந்தமாக எழுத்துபூர்வமான புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரி. காயம் பட்ட நபர்களுக்கு மருத்துவ உதவி செய்யவில்லை என்றால் சரி. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும் அதனால் தான் புகார் கொடுக்கவில்லை என்றாலும் மருத்தவ உதவியும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**1 முதல் 5, 7 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 5, 7 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் இலவச வழக்கறிஞர் நியமனம் செய்ய மனுக்கொடுத்து திரு. திருமால் சுந்தரம் வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டார் ஆனால் மேற்படி எதிரிகள் தங்கள் தரப்பில் வேறு வழக்கறிஞர் நியமனம் செய்யப்போவதாக சொல்லி அவர் வக்காலத்து தாக்கல் செய்யவேண்டாமென்று சொல்லிவிட்டதால் திருமால்சுந்தரம் வழக்கறிஞர் வக்காலத்து தாக்கல் செய்யவில்லை. மேற்படி எதிரிகள் தங்கள் வழக்கறிஞர் திரு. சந்தோஷ், MS. 3468/2019 என்பவர் தங்களுக்காக ஆஜராவதாக சொன்னார்கள். அவரும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். ஆனால் வக்காலத்து தாக்கல் செய்யவில்லை. சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவும் தயாராக இல்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை.

மகேந்திரன்

**6, 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

6, 9 எதிரிகள் தரப்பில் திரு. நடேச ஜெயராமன், வழக்கறிஞர் வக்காலத்து தாக்கல் செய்தார் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார். எனவே குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

14/2/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

14/2/25